எம்.சி.ஓ.பி எண்: 1977 /2012 தேதி: 16.02.2026

மசா. : 3

பெயர் : பூபாலன்

த/பெ. : நடராஜன்

வயது : 50

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசராணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 27 மட்டும் முதல் வரை தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்கிறேன். 1ம் மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பெயரில் சாட்சி சொல்லவந்துள்ளேன். இந்த மனுவில் விபத்து இறந்த நபர் குறித்த தகவலை நான் முதல் மனுதாரருக்கு தொலைபேசி மூலம் கூறினேன். அதனால் அவருக்கு இந்த விபத்தை பற்றி தெரியவந்தது. இந்த விவரத்தை நான் என் பிரமாணவாக்குமூலத்தில் கூறவில்லை. முதல் மனுதாரரின் செல் நம்பர் தற்பொழுது சொல்லமுடியுமா என்றால் முடியாது. விபத்து நடந்த அன்று இறந்தவரின் டைரியை பார்த்து முதல் மனுதாரரின் செல் நம்பரை தெரிந்துகொண்டேன். நான் சொல்லுவது போல எதுவும் நடக்கவில்லை என்றாலும் விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் மனுதாரருக்கு ஆதாரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து தாம்பரம் டூ பல்லாவரம் சாலையில் நடந்தது என்றால் சரி. விபத்து ஏற்படுத்திய இருசக்கரவாகனம் Splender கருப்பு கலர் வாகனம் ஆகும். போலீசில் புகார் நான் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் சொல்லுவது போல் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் குற்றப்பத்திரிக்கையில் என்னுடைய பெயர் சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. விபத்தில் காயம் அடைந்தவர் ஒரு வார காலத்தில் இறந்துவிட்டதாக பின்னிட்டு முதல் மனுதாரர் எனக்கு ஃபோன் மூலம் சொன்னார். 20ம் தேதி அன்றே விபத்தில் காயம்அடைந்தவர் இறந்துவிட்டார் என்றாலும் ஒருவாரம் கழித்து அவர் இறந்துவிட்டதாக முதல் மனுதாரர் என்னிடம் கூறியதாக நான் சொல்லுவதிலிருந்தே நான் முதல் மனுதாரரிடம் பேசவில்லை என்றாலும் அவர் எனக்கு எந்த தகவலும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய உறவினர் வீட்டிற்கு குரோம்பேட்டைக்கு

செல்லுவதற்காக வந்தேன். அவருடைய முகவரியை சொல்லமுடியுமா என்றால் என்னிடம் இல்லை. சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தம் இல்லை. நான் சொல்லுவது போல சம்பவ இடத்தில் விபத்து நடக்கவில்லை என்றாலும் விபத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

x

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.